Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

பாடம் : வரலாறு

வாரம் - 5

தரம்: 11

ஆக்கம்: ஆசிரியை N. பத்மலோஷனி
கே/ சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்

## பிரித்தானியரின் கீழ் இலங்கையில் சமூக மாற்றங்கள்
## (பக்கம் 73 – 77)

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக**

1. இலங்கையில் கூலி பெறாது ஒருவருக்கொருவர்உழைப்பைப் பரிமாறி ஒத்துழைப்பாக வாழ்ந்த முறை எவ்வாறு குறிப்பிடப்படுகின்றது?
   I. பஞ்சாயத்து II. கம்சபா III. தவளம் IV. அதீதம்

2. சேவா பரவேணி எனக் குறிப்பிடப்பட்ட நிலவகை எது?
   I. அரச உயர் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டவை.
   II. குடி மக்களுக்கு வழங்கப்பட்டவை.
   III. போர் வீரர்களுக்கு வழங்கப்பட்டவை.
   IV. அரசனின் சொந்த பாவனைக்கு ஒதுக்கப்பட்டவை.

3. ஹெமிலியா வெஸ்டாக்ஸ் நோய்க்கு இலக்கான பயிர் எது?
   I. சிங்கோனா II. கொக்கோ III. தேயிலை IV. கோப்பி

4. கோல்புறூக் இலங்கை வரும்போது அரசின் ஏகபோக உரிமை நிலவிய வர்த்தகப் பொருட்கள் யாவை?
   I. மாணிக்கமும் முத்தும் II. கறுவாவும் உப்பும்
   III. யானையும் யானைத்தந்தமும் IV. கோப்பியும் கொக்கோவும்

5. கோல்புறூக் ஆணைக்குழு அனுப்பப்பட்டதன் அடிப்படை நோக்கம் ஒன்றல்லாதது எது?
   I. அரசாங்கத்தின் வரவை அதிகரித்தலும் செலவைக் கட்டுப்படுத்தலும்
   II. பொருத்தமா அரசாங்க நிருவாக அமைப்பை உருவாக்குதல்.
   III. பொதுவான நீதி முறை ஒன்றை ஏற்படுத்துதல்.
   IV. பொதுவான மொழியொன்றை பரிந்துரை செய்தல்.

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

"எமது முதலாவது பெருந்தோட்ட பயிர் கோப்பியாகும்"

1. ஆளுநர் எட்வட் பாண்ஸ் இத்துறைக்கு ஆற்றிய பிரதான பணிகள் இரண்டைக் குறிப்பிடுக.
2. இத் தொழில் இடையிடையே எதிர் நோக்கிய இடர்பாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.
3. இச் செய்கையினால் இலங்கையர் எதிர்நோக்கிய பிரச்சினைகளைக் குறிப்பிடுக.
4. கோப்பி பயிர் செய்கை எக்காலத்தில் ஆரம்பமானது?
5. கோப்பி பயிர் செய்கையை அழித்த நோயின் பெயர் யாது?
6. நாட்டில் சேமிப்பு வங்கி ஒன்றை ஆரம்பிக்க கோல்புறூக் சிபார்சு செய்தமைக்கான காரணம் யாது?
7. அரசுக்கு தேவையான உழைப்பைப் பெற்றுக் கொண்ட அரச சேவைகள் முறைகள் யாவை?